**சீடத்துவம்: தந்தையைப் போல் இரக்கம் உள்ளவர்களாக இருங்கள்**

பெப்பிரவரி 2016: **பலியை அல்ல இரக்கத்தை விரும்புகிறோம்**

**தொடக்கப் பாடல் –**

**தொடக்கச் செபம்** - அதிச உறுப்பினர்களில் ஒருவர் தொடக்கச் செபம் அழைத்தல்

<u>**வாழ்வை நோக்குதல்**</u>

மெரிகான் பக்திமிகுந்த ஒரு கத்தோலிக்கர். பல்வேறு பங்கு பணிக்குழுக்களில் சுறுசுறுப்பாக செயல்படுபவர். பங்கில் பல முக்கிய பதவிகளை வகிப்பதால், ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் ஆலயத்திலேயே தமது பொழுதைக் போக்குவார். அவரையேச் சுற்றியிருக்கும் பங்கு மக்கள், அவரது நண்பர் கூட்டம் அவரையே நாடுவர். வேலை பளு காரணமாக, அவர் தமது குடும்பத்தாருடன் நேரத்தைக் கழிப்பது குறைவு. அவரது பிள்ளைகள் அவரோடு பேசுவதற்கு வாய்ப்பே கிடைக்காது. வேலையிடத்திலும் அவரது வேலை அழுத்தம் காரணமாக, வீட்டில் எழும் சின்னஞ்சிறிய காரியங்களுகெல்லாம் ஆத்திரப்படுவார். அவரது மனைவி- பிள்ளைகள் மீதும் ஒருமுறை வன்முறையைப் பயன்படுத்தினார். வேலையிடத்திலும், உதவி தேவைப்படும் தமது சக ஊழியர்கள் பற்றி கவலைப்படுவதற்கும் அவருக்கும் நேரமில்லை. ஒரு முறை அவரது அலுவலகத்தைச் சுத்தம் செய்யும் அந்நிய வெளிநாட்டுப் பணிப்பெண், விலையுயந்த கிண்ணத்தை உடைத்து விட்டார். ஆத்திரத்தில் சீறி எழுந்த அவர், அதற்குப் பதிலாக வேறொன்றை வாங்கி தர வேண்டும் என பிடிவாதம் பிடித்தார். மெரிகானுக்கு ஒருசில நண்பர்களே இருந்தார்கள். ஆலயத்திலும் அவ்வாறுதான். கடவுளுக்கு சேவையாற்றுவததில் தாம் தியாகம் செய்ய வேண்டும் என அவர் நம்பினார்.

1. இந்த கதையில், ‘தியாகம்’ என்பதை புரிந்து கொள்வதில் மெரிகானுக்கு சிக்கல் உண்டு என நீங்கள் நினைக்கிறீர்களா? அப்படியென்றால் அந்த வார்த்தையை அவர் புரிந்து கொண்ட விதம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
2. மற்றர்களை தீர்ப்பிட வேண்டும் என எண்ணாமல், மெரிகான் போன்று சிலரை நீங்கள் அறிவீர்களா?

<u>**இறைவார்த்தை**</u>

மாற்கு 12: 28-34 **முதன்மையான கட்டளை**

[28] அவர்கள் வாதாடிக்கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த மறைநூல் அறிஞருள்
ஒருவர், இயேசு அவர்களுக்கு நன்கு பதில் கூறிக் கொண்டிருந்ததைக் கண்டு அவரை
அணுகி வந்து, “அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?” என்று கேட்டார். [29-30]
அதற்கு இயேசு, ‘‘இஸ்ரயேலே கேள், நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர்,
[31] உன் முழு இயதத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழு
ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக,’’ என்பது
முதன்மையான கட்டளை. ‘‘உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர்
மீதும் அன்பு கூர்வாயாக.’ என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான
கட்டளை வேறு எதுவும் இல்லை” என்றார். [32] அதற்கு மறைநூல் அவரிடம், ‘‘ நன்று
போதகரே, கடவுள் ஒருவரே அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை,’’ என்று நீர்
கூறியது உண்மையே, [33] அவரிடம் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு
ஆற்றலோடும் அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்பு கொள்வது போல்
அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்துவதும் எரிபலிகளையும் வேறு பலிகளையும்விட
மேலானது’’ என்று கூறினார், [34] அவர் அறிவுத்திறனோடு பதிலளித்ததைக் கண்ட இயேசு
அவரிடம், ‘‘நீர் இறையாட்சியினின்று தொலைவில் இல்லை’’ என்றார். அதன்பின்
எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**சிந்தனை**

- ஒரு நிமிடம் மௌனம் காத்து, கடவுள் பேசுவதைக் கேளுங்கள்,
- இந்த வாசகத்தில் ஒரு வார்த்தை அல்லது வாசகத்தை தேர்ந்தெடுத்து, அதனை மூன்று முறை கூறவும்.
- உங்களைத் தொட்ட அந்த வார்த்தை அல்லது வாசகம் ஏன் உங்களைத் தொட்டது என்பதை பகிர்ந்து கொள்ளவும்.

**<u>அன்பில் வாழ்தல்</u>**

இந்த இரக்கத்தின் ஆண்டின் போது, கடவுளின் இரக்கத்தை என் வழியாக மற்றவர்கள் அனுபவித்துக் கொள்வதற்கு, இரக்கத்தின் கதவு வழியாக கடவுள் நுழைவதற்கு அனுமதிக்க நான் செய்ய வேண்டும்?

**இறுதிச் செபம் –** செபிக்க அனைவரையும் அழைக்கவும். கர்த்தர் கற்பித்தச் செபத்தோடு கூட்டத்தை நிறைவு செய்க.

**இறுதிப் பாடல்**